கூட்டம் எண்.14

நாள். 14.12.2020
பூவிருந்தவல்லி நகராட்சி

<u>அவசரக் கூட்டம்</u>

<u>முன்னிலை :- திரு. சி.வி.ரவிச்சந்திரன், பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர்</u>

பூவிருந்தவல்லி நகராட்சி தனி அலுவலர் அவசரக் கூட்டம் 14.12.2020 காலை 11.00 மணிக்கு நடத்தப்பட்டது. அது சமயம் பொறியாளர், நகரமைப்பு ஆய்வர், வருவாய் ஆய்வர், துப்புரவு ஆய்வர் மற்றும் மேலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆணையர் (ம) தனி அலுவலர்
பூவிருந்தவல்லி நகராட்சி

பொருள் எண்.1

பூவிருந்தவல்லி நகராட்சியின் எல்லைக்குட்பட்ட சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 ன் கீழ் ரூ.450.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு நகர மன்றத்தின் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந,க.எண்.20557/2020/இ3, நாள்.11.12.2020 ஆம் தேதியுட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்கண்ட நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட மாநிய நிதி | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| பூவிருந்தவல்லி | 4.50 | 3.83 | 0.67 |

எனவே, மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும் தீர்மானம் நிறைவேற்றி நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

| சிப்பம் எண். | பணியின் விவரம் | சாலையின் நீளம் கி.மீ | சாலையின் அகலம் மீட்டர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | ஆரியமந்தநல்லூர் பிரதான சாலை, பவானியம்மன் கோவில் முதல் தெரு, தனலட்சுமி நகர் விரிவு, ஸ்ரீ சீனிவாச நகர் விரிவு, முத்துசாமி நகர் 1வது, 2வது மற்றும் 3வது தெருக்கள், சுமித்ரா நகர் பிரதான சாலை ஆகிய தெருக்களுக்கு தார்தளம் அமைத்தல் மற்றும் பாரிவாக்கம் சுடுகாடு சாலைக்கு சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைத்தல். | 1.691 | 5.00முதல் 7.00 வரை | 150.00 |
| 2 | சம்மந்தம் தெரு, பொன்னியம்மன் கோவில் முதல் தெரு, மகாலட்சுமி நகர் பிரதான சாலை மற்றும் 1வது, 2வது மற்றும் 3வது தெருக்கள், ஸ்ரீ சீனிவாச நகர் 5வது, 6வது, 7வது மற்றும் 8வது தெருக்கள், பழைய இந்தியன் வங்கி சாலை, நண்பர்கள் நகர் 4வது, 5வது மற்றும் 7வது தெருக்கள், சித்தா அவென்யு குறுக்கு தெரு மற்றும் வைதி நகர் பிரதான சாலை ஆகிய தெருக்களுக்கு தார்தளம் அமைத்தல் | 1.817 | 5.00முதல் 6.00 வரை | 150.00 |
| 3 | திருமால் நகர் முதல் பிரதான சாலை, சின்னராஜ் நகர் குறுக்கு தெரு, பஜார் தெரு ஆகிய தெருக்களுக்கு தார்தளம் அமைத்தல் மற்றும் பேருந்து நிலைய வளாக சாலைக்கு சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைத்தல். | 1.150 | 6.00முதல் 7.00 வரை | 150.00 |
| | **மொத்தம்** | 4.658 | - | 450.00 |

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மேற்படி பணிகளை சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 ன் கீழ் மேற்கொள்ளவும் கருத்துரு சமர்பிக்கவும் அனுமதி வழங்கலாம்.
2. மதிபீட்டுத்தொகை ரூ.450.00 இலட்சத்தின் மான்யத்தொகை ரூ.383.00 இலட்சம் போக மீத தொகை ரூ.67.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2240/2020/இ1)